பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-3-1995) புதன்கிழமை காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

1. 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 8-3-1994-ஆம் நாளிட்ட 258-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

2. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/1994) எந்த தேதியிலிருந்து செயலுக்கு வரும் என்பதை குறிப்பிடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 23-8-1994-ஆம் நாளிட்ட 269-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

3. தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்கள் மற்றும் துணைப் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-8-1994-ஆம் நாளிட்ட 271-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

4. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12-5-1994-ஆம் நாளிட்ட 333-ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

5. சென்னை, திருவாளர்கள் கெமாக் லேபோரடரீஸ் நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய விற்பனை வரியினை 1992-93-ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20-6-1994-ஆம் நாளிட்ட 187-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

6. சென்னை, பெசன்ட் நகர், திருவாளர்கள் சுவாமி சிவானந்தா நினைவு டிரஸ்டினால் பராமரிக்கப்பட்டுவரும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் பத்தமடையிலுள்ள அறக்கட்டளை மருத்துவமனை மற்றும் ஊரக சுகாதார நல மையத்திற்கு விற்கப்படும் சில பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25-8-1994-ம் நாளிட்ட 273-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

7. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமப் பொருட்கள் சலுகைகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழில் துறையின் 26-10-1994-ஆம் நாளிட்ட 290-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1957-ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமப் பொருட்கள் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 28 (1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

8. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 25-11-1993-ஆம் நாளிட்ட 247-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

9. பெரியார் மாவட்டம் பன்னாரியிலுள்ள பன்னாரி மாரியம்மன் குண்டம் மறு பூஜை விழாவிற்காக 27-3-1994 முதல் 5-4-1994 வரை கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்தினால் தற்காலிக உரிமம் பெற்று இயக்கப்பெற்ற 10 பயணிகள் பேருந்துகளுக்கு வாகன வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்துத்) துறையின்

9-3-1994-ஆம் நாளிட்ட 211-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

10. கோயம்புத்தூர், சேரன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்காக அக்கழக்தினால் 1-4-1985 முதல் 31-3-1986 வரையில் செலுத்தப்படவேண்டிய தண்டவரியில் ஐம்பது சதவீதத் தொகையை கைவிடுதல் குறித்து உள் (போக்குவரத்துத்) துறையின் 3-3-1994-ஆம் நாளிட்ட 241-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

11. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (நீதிமன்றங்கள்) துறையின் 24-10-1994-ஆம் நாளிட்ட 1285-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 59/1992) 13 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

12. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (உற்பத்தி) விதிகளை 16-7-1991-ஆம் தேதி முதல் திரும்பப் பெற்றுக் கொள்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 22-9-1994-ஆம் நாளிட்ட 153-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

13. 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 23-6-1993-ஆம் நாளிட்ட 362-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

14. திரைப்படக் கருவிக்குத் தேவையான கச்சா படச் சுருள்கள் விற்பனையின் மீது செலுத்த வேண்டிய வரிவீதத்தை 5 சதவீதத்திலிருந்து

3 சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 27-9-1994-ஆம் நாளிட்ட 309-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

15. ஆறாவது பட்டியலின் கீழ் வருகின்ற சில பொருட்களின் இரண்டாவது விற்பனைக்கு 1-4-1994 முதல் 27-9-1994 வரையுள்ள காலங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28-9-1994-ஆம் நாளிட்ட 312-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

16. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3-10-1994-ஆம் நாளிட்ட 316-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

17. வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் சேத்துபட்டிலுள்ள திருவாளர்கள் ஷேம மறுவாழ்வு பயிற்சி மையத்தினரால் 1-4-1990 முதல் 31-3-1995 வரையில் நடத்தப்படும் பயிற்சியின் போது தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனைக்கு வரி விதிப்பதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 4-10-1994-ஆம் நாளிட்ட 319-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

18. 1994-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) விதிகளை வகுப்பது குறித்து பொதுப் பணித்துறையின் 27-4-1994-ஆம் நாளிட்ட 374-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

19. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்-மண்டலம்-1-ல் அடங்கியுள்ள நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் வழங்குகையை முறைப்படுத்துவது குறித்து பொதுப் பணித்துறையின் 27-4-1994-ஆம் நாளிட்ட 375-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

20. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பட்டியல்கள் 1, 3 மற்றும் 6-ல் திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28-9-1994-ஆம் நாளிட்ட 311-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

21. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 11-8-1994-ஆம் நாளிட்ட 133-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

22. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் சங்கர் நகரிலுள்ள திருவாளர்கள் இண்ட்ஸ்டிரியல் கெமிக்கல்ஸ் மற்றும் மனோமேர்ஸ் நிறுவனத்தினரால் செலுத்தப்பட வேண்டிய வரியினை 22-9-1992 முதல் 21-8-1995 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25-4-1994-ஆம் நாளிட்ட 126-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

23. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் 20-2-1974 முதல் 16-5-1978 வரையிலான காலங்களில் கையினால் தயாரித்த சோப்புகளின் விற்பனையில் விற்பனை வரி, கூடுதல் வரி மற்றும் மேல் வரி ஆகியவைகளைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-8-1994-ஆம் நாளிட்ட 270-ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

24. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 18-8-1994-ஆம் நாளிட்ட 140-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

25. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 11-8-1994-ஆம் நாளிட்ட 131-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

26. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10-10-1994-ஆம் நாளிட்ட 331-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

27. 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 19-8-1994-ஆம் நாளிட்ட 759-ஆண் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

28. பதிவு எண் எம்.டி.எச். 3759 என்ற இயக்கூர்திக்கு 31-12-1984-ஆம் நாளுடன் முடிவடைந்த காலாண்டிற்கு நிலுவையாக உள்ள வரி மற்றும் தண்டத் தீர்வையை தள்ளுபடி செய்வது குறித்து உள் துறையின்

4-4-1994-ஆம் நாளிட்ட 385-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

29. ஆந்திர மாநிலம், புட்டபர்த்தி சத்யசாயி மேல் படிப்பு நிறுவனம் 10-4-1994 முதல் 11-5-1994 வரை தமிழ்நாட்டில் கல்வி சார்ந்த பயணத்திற்கு பயன்படுத்திய இயக்கூர்தி பதிவு எண் எபி.02/வி/0909-க்குச் செலுத்த வேண்டிய மோட்டார் வாகன வரிக்கு விலக்களிப்பது குறித்து உள் துறையின் 7-4-1994-ஆம் நாளிட்ட 406-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

30. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 4-10-1994-ஆம் நாளிட்ட 320-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

31. 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 22-9-1994-ஆம் நாளிட்ட 306-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

32. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்-மண்டலம்-2-ல் அடங்கியுள்ள நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் வழங்குகையை முறைப்படுத்துவது குறித்து பொதுப் பணித்துறையின் 6-10-1994-ஆம் நாளிட்ட 1016-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

33. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்—மண்டலம்-2-ல் அடங்கியுள்ள நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் வழங்குகையை முறைப்படுத்துவது குறித்து பொதுப் பணித்துறையின் 6-10-1994-ஆம் நாளிட்ட 1016-ஆம்

எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை எண்.555-க்கு மாற்றாக, பொதுப் பணித்துறையின் 12-10-1994-ஆம் நாளிட்ட 1042-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

34. 17-7-1980-ஆம் நாளிட்ட வேளாண்மைத் துறையின் II(2)/A.G/3466/80-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 17-10-1994-ஆம் நாளிட்ட 575-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

35. 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக பெரியார் மாவட்டத்தை எள்ளினைப் பொறுத்தவரையில் அறிவிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 17-8-1994-ஆம் நாளிட்ட 489-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

36. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 1993-94-ஆம் ஆண்டிற்கான இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

37. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

38. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1992-93 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

39. தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 1992-93-ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம்

ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

40. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1993-94-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ் ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29-7-1993-ஆம் நாளிட்ட 261-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25-8-1994-ஆம் நாளிட்ட 31695/ எப்.1/94-1-ஆம் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/1995).

3. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1995).

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

5. 1995-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

6. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (பட்டியல் 1 முதல் 8 வரை) (ஒவ்வொரு பட்டியலும் வரிசை எண் 1 முதல் 100 வரை).